**தலைப்பு – 123 நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் I ஆம் பந்தியிலும் 2 ஆம் பந்தியிலும் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 3 ஆம் பந்தியிலிருந்து ஒவ்வொரு தலைப்பிற்கும் உரித்தான கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

**1. அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்கள்**

| **தலைப்பு** | **திணைக்களம்** |
|---|---|
| 309 | கட்டிடங்கள் திணைக்களம் |
| 310 | அரசாங்க தொழிற்சாலை |
| 311 | தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம் |

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

மேற்குறித்த 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு மற்றும் அவ் அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்களின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வணிக முற்பணக் கணக்கு, களஞ்சிய முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை பின்வரும் நாட்களில் அவ் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டிருந்தது. கணக்குகள் மற்றும், இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்

வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

| **தலைப்பு** | **அமைச்சு/ திணைக்களம்** | **முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை விநியோகிக்கப்பட்ட திகதி** |
|---|---|---|
| 123 | நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு | 2015.07.20 |
| 309 | கட்டிடங்கள் திணைக்களம் | 2015.07.08 |
| 310 | அரசாங்க தொழிற்சாலை | 2015.09.14 |
| 311 | தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம் | 2015.07.10 |

## 1.2 கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, வணிக முற்பணக் கணக்கு, களஞ்சிய முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக்

கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக்கட்டுப்பாட்டுத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்குகள்

### 2.1 ஓதுகீட்டுக் கணக்கு

**மொத்த நிதிஏற்பாடும் செலவும்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 03 திணைக்களங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 5,310.09 மில்லியன் தொகையான மொத்த தேறிய ஏற்பாட்டில் மீளாய்வாண்டின் இறுதியில் இதில் ரூபா 3,964.25 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்பு ரூபா 2.07 மில்லியன் முதல் ரூபா 1,316.60 மில்லியன் வரையான வீச்சில் அதாவது தேறிய ஏற்பாட்டில் 0.69 சதவீதத்திலிருந்து 28.37 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டன. விபரம் பின்வருமாறாகும்.

**2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு**

| தலைப்பு | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 123 | 4,639.80 | 3,323.20 | 1,316.60 | 28.38 |
| 309 | 298.61 | 296.54 | 2.07 | 0.69 |
| 310 | 208.63 | 186.37 | 22.26 | 10.67 |
| 311 | 163.05 | 158.14 | 4.91 | 3.01 |
| **மொத்தம்** | **5,310.09** | **3,964.25** | **1,345.84** | **25.34** |

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாரளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள 03 திணைக்களங்களிற்கு உரித்தான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளவாறான பெறுமதிகள் பின்வருமாறாகும்.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 12301 | 7.00 | 6.85 | 4.00 | 7.65 | 40.00 | 23.65 |
| 30901 | 18.00 | 15.75 | 12.00 | 15.91 | 85.00 | 46.01 |
| 31001 | 22.00 | 21.98 | 18.00 | 19.47 | 120.00 | 85.68 |
| 31101 | 11.00 | 10.11 | 6.80 | 8.11 | 90.00 | 32.27 |

### 2.2.2 வணிக முற்பணக் கணக்குகள்

அமைச்சின் கீழ் உள்ள திணைக்களத்தால் 02 வணிக முற்பணக் கணக்குகள் பேணப்பட்டிருந்தன.

**(அ) பாரளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சின் கீழ் உள்ள திணைக்களத்தால் இரு வணிக முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான மீதிகள் பின்வருமாறாகும்.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | | பொறுப்புகள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 31003 | 450.00 | 441.36 | 290.00 | 478.98 | 180.00 | 104.31 | 5.00 | 0.88 |
| 31002 | 170.00 | 144.05 | 120.00 | 188.95 | 40.00 | 33.20 | 20.00 | 23.37 |

**(ஆ) நிதி விளைவுகள்**

அரசாங்க தொழிற்சாலையின் களஞ்சிய முற்பணக் கணக்கு மற்றும் செய்யப்பட்ட வேலை முற்பணக் கணக்காக 02 வணிக முற்பணக் கணக்குகள் பேணப்பட்டு வருவதுடன் ஆண்டின் இறுதியில் களஞ்சிய முற்பணக் கணக்கின் பற்றாக்குறை அல்லது மிகை செய்யப்பட்ட வேலை முற்பணக் கணக்கிற்கு மாற்றப்படும். மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் வணிக முற்பணக் கணக்குகளின் நிதி விளைவுகள் பின்வருமாறாகும்.

| விடய இல. | முற்பணக் கணக்கு நடவடிக்கைகள் | நிதி விளைவுகள் 2014 | | நிதி விளைவுகள் 2013 | |
|---|---|---|---|---|---|
| | | உத்தேச செலவுகளைத் தவிர்த்து இலாபம் | உத்தேச செலவுகளை உள்ளடக்கிய இலாபம் | உத்தேச செலவுகளைத் தவிர்த்து இலாபம் | உத்தேச செலவுகளை உள்ளடக்கிய இலாபம் |
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 31002 | களஞ்சிய முற்பணக் கணக்கு | 3.15 | 3.04 | 36.47 | 36.36 |
| 31003 | செய்யப்பட்ட வேலை முற்பணங்கள் கணக்கு | 5.10 | 4.90 | 25.44 | 25.24 |

## 2.3 கட்டுநிதி கணக்குகள்

அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்களின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கட்டுநிதி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 20.59 மில்லியன் ஆக இருந்தது. விபரம் பின்வருமாறு காணப்பட்டது.

| திணைக்களம் | கட்டுநிதிக் கணக்கு இல. | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா மில்லியன் |
| கட்டிடங்கள் திணைக்களம் | 7002/0000/000/0067/0014 | 9.97 |
| அரசாங்க தொழிற்சாலை | 7002/0000/000/0043/0014 | 10.62 |
| **மொத்தம்** | | **20.59** |

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 03 திணைக்களங்களின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 684.33 மில்லியன் ஆகும். விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| அமைச்சு/ திணைக்களம் | வைப்புக் கணக்கு இலக்கம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா மில்லியன் |
| நிர்மாண பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு | 6000/0000/0015/0079/000 | 0.51 |

| | | |
|---|---|---|
| கட்டிடங்கள் திணைக்களம் | 6000/0000/00/0015/0163/000 | 99.78 |
| | 6000/0000/00/0015/0176/000 | 579.11 |
| அரசாங்க தொழிற்சாலை | 6000/0000/00/0015/0164/000 | 4.20 |
| தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம் | 6000/0000/00/0015/0165/000 | 0.73 |
| | | ----------- |
| | | **684.33** |
| | | ===== |

**2.5 கணக்காய்வு அவதானிப்புகள்**

-----------------------------------------

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு மற்றும் திணைக்களங்களின் ஒதுக்கீட்டுக் கணக்குகள், வணிக முற்பணக் கணக்குகள், களஞ்சிய முற்பணக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளில் போதுமானதும் முக்கியமானதுமான அவதானிப்புகள் 3 ஆம் பந்தி முதல் 6 ஆம் பந்தி வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. தலைப்பு – 123 – நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு**

---------------------------------------------------------------------------------------------------------------------

**3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

-------------------------------

**பாதீட்டு முரண்**

---------------------

10 செலவின விடயங்களிற்காக ரூபா 1,196,857,870 தொகையான மிகை நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்பு அச் செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதிஏற்பாட்டில் 10 சதவீதத்திற்கும் 94 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சைக் கொண்டிருந்தது.

**3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

12301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் அத் திகதியில் 01 ஆண்டு முதல் 03 ஆண்டுகள் வரையான காலப்பகுதியின் போது அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 500,310 ஆகக் காணப்பட்டதுடன் அந் நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அமைச்சு தவறியிருந்தது.

**3.3 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**3.3.1 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக போதிய உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.4 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 27 | 24 | 03 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 01 | 03 | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (iii) | இரண்டாம் நிலை | 107 | 99 | 08 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 44 | 41 | 03 | - |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 02 | - | 02 |
| | மொத்தம் | 182 | 167 | 17 | 02 |

**4. தலைப்பு 309 – கட்டிடங்கள் திணைக்களம்**

**4.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை**

திணைக்களத்தால் பின்வரும் சில பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிராமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புகள் |
|---|---|---|
| பொறுப்புப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 214 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை |
| கணனி உதிரிப் பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை |

**4.2 நிதிஏற்பாடுகளுக்கு மேலான பொறுப்புகளுக்கு உட்படுதல்**

6 செலவின விடயங்களுக்காக நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேறிய நிதிஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டதை அடுத்துள்ள சேமிப்பு ரூபா 47,957 தொகையான போதிலும், நிதிப் பிரமாணம் 94(1) இற்கு மாறாக அச் சேமிப்பு ரூபா 1,474,035 தொகையால் மிகைத்து ரூபா 1,521,992 தொகையான பொறுப்புகளுக்கு உட்பட்டிருந்தது.

**4.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

30901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அன்றைய தினம் 01 வருடம் முதல் 09 வருடங்கள் வரையான கால வீச்சிலிருந்து நிலவிவரும் ரூபா 1,810,088 கூட்டுத்தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) 2005 திசெம்பர் 23 ஆம் திகதி மற்றும் 2013 யூன் 07 ஆம் திகதி சேவையை விட்டு விலகிச் சென்ற உத்தியோகத்தர் மற்றும் ஊழியரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய முறையே ரூபா 367,002 தொகையும் ரூபா 37,160 தொகையுமான கடன் மீதி உத்தியோகத்தரிடமிருந்தும் ஊழியரிடமிருந்தும் அல்லது பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடப்படுவதற்கு 2015 யூன் மாதம் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 மார்ச் 17 ஆம் திகதி ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவரின் ரூபா 238,330 தொகையான கடன் மீதி தீர்க்கப்படுவதற்கு திணைக்களம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தவறியிருந்தது.

## 4.4 செயலாற்றல்

### திட்டமிடல்

2014 வருடாந்த பாதீடு மற்றும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி, திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) மீளாய்வாண்டின் போது ரூபா 8,598.72 மில்லியன் கூட்டுத்தொகையான 10 செயற்திட்டங்கள் பூர்த்திசெய்யப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டங்கள் எதுவும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது செயற்படுத்தப்பட்ட ரூபா ஐந்து மில்லியனுக்கு மேற்பட்ட 51 செயற்திட்டங்களுக்காக ரூபா 2,643.56 மில்லியன் கூட்டுத்தொகையான பணம் செலவிடப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டங்கள் செயல்நடவடிக்கைத் திட்டங்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 4.5 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 116 | 76 | 40 |
| (ii) | மூன்றாம் நிலை | 23 | 07 | 16 |
| (iii) | இரண்டாம் நிலை | 273 | 176 | 97 |
| (iv) | ஆரம்ப நிலை | 177 | 138 | 39 |
| | மொத்தம் | **589** | **397** | **192** |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் திணைக்களத்தின் பதவியணி வெற்றிடம் 192 ஆக நிலவிய போதிலும் இது திணைக்களத்தின் செயலாற்றல் தொடர்பாகத் தாக்கமளித்திருக்கவில்லை.

**5. தலைப்பு 310 - அரசாங்கத் தொழிற்சாலை**

**5.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**5.1.1 பாதீட்டு முரண்**

07 செலவின விடயங்களுக்காக ரூபா 21,372,774 தொகையான மிகை நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்பு அச் செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 16 சதவீதம் முதல் 50 சதவீதம் வரையான வீச்சைக் கொண்டிருந்தது.

**5.2 ஏற்பாடுகளுக்கு மேலான பொறுப்புகளுக்கு உட்படுதல்**

நிதிப் பிரமாணம் 94(1) இற்கு முரணாக 03 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதிஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டதை அடுத்துள்ள சேமிப்பு ரூபா 42,164 தொகையான போதிலும், நிதிப் பிரமாணம் 94(1) இற்கு முரணாக அச் சேமிப்பு ரூபா 748,726 தொகையால் மிகைத்து ரூபா 790,890 தொகையான பொறுப்புகளுக்கு உட்பட்டிருந்தது.

**5.3 பொது வைப்புக் கணக்கு**

2 ஆண்டுகள் கடந்த ரூபா 690,054 தொகையான 05 வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

31001 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பான 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,308,264 தொகையானதுடன் இதில் ரூபா 1,905,405 தொகை 1 வருடம் முதல் 3 வருடங்கள் வரையான கால வீச்சளவிலும் மிகுதி ரூபா 1,402,859 தொகையான கடன் மீதி 03 ஆண்டுகளுக்கு மேலான காலமாகவும் நிலவிவந்த போதிலும் அந் நிலுவைக் கடன் மீதியை அறவிடும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

(ஆ) ஒரு உத்தியோகத்தரின் ரூபா 15,850 தொகையான கடன் மீதிக்குரிய கோவைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 5.5.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக அத்தகைய செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.5.2 உள்ளகக் கணக்காய்வு

நிதிப் பிரமாணம் 133 மற்றும் 2009 சனவரி 09 ஆம் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியில் காணப்படும் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று திணைக்களத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே

மீளாய்வாண்டின் போது திணைக்களத்தின் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் செயல்நடவடிக்கைகள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**5.6.1 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

கொலொன்னாவ அரசாங்கத் தொழிற்சாலை அமைந்துள்ள 15 ஏக்கர் காணியில் 1 ரூட் 16 பேர்ச் அளவிலான காணி 50 ஆண்டுகளுக்கு மேலான காலமாக அத்துமீறிய குடியிருப்பாளர்களால் அனுபவிக்கப்படுவது அவதானிக்கப்பட்டது.

**5.7 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 21 | 16 | 05 |
| (ii) | மூன்றாம் நிலை | 07 | 05 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 157 | 126 | 31 |
| (iv) | ஆரம்ப நிலை | 434 | 351 | 83 |
| | மொத்தம் | **619** | **498** | **121** |

**தலைப்பு – 311 - தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம்**

---

**6.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை**

1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தால் நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

**6.2 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதீட்டு முரண்**

13 செலவின விடயங்களுக்காக ரூபா 3,087,918 தொகையான மிகை நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்பு அச் செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 10 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சைக் கொண்டிருந்தது.

**6.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 31101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 2,735,174 தொகையான மீதிகளில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 514,073 தொகையான நிலுவை மீதியை அறவிடுவதற்காக திணைக்களம் தவறியிருந்தது.

**6.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**உள்ளகக் கணக்காய்வு**

திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிராததுடன் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்றின்

மூலமேனும் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**6.5 செயலாற்றல்**

1946 இன் 13 ஆம் இலக்க நகர மற்றும் கிராமிய ஆக்க கட்டளைச் சட்டத்தின் பிரகாரம், ஸ்தாபிக்கப்பட்ட நகர மற்றும் கிராமிய ஆக்கத் திணைக்களம், 2000 இன் 49 ஆம் இலக்க திருத்தப்பட்ட நகர மற்றும் கிராமிய ஆக்க அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களமாகியது. இத் திணைக்கள நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் திட்டம் தயாரிக்கப்படுவதற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அத் திட்ட அமுலாக்கங்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிராமையால் திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்ட நோக்கம் போதியளவில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**6.6 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 40 | 10 | 30 |
| (ii) | மூன்றாம் நிலை | 07 | 02 | 05 |
| (iii) | இரண்டாம் நிலை | 141 | 77 | 64 |
| (iv) | ஆரம்ப நிலை | 225 | 202 | 23 |
| | மொத்தம் | **413** | **291** | **122** |